aanmeegamalar.com

e-magazine www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

மதுரை

# சித்திரைத் திருவிழா

## சிறப்பு மலர்




சேலஞ்ச்

Detergent Cake, Washing Powder & Detergent liquid

சேலஞ்ச் சுத்தத்தின் வாசனை...!

Trade Enquiry - 72003 01382



# அனைத்து அலங்காரத்தையும் தரிசித்தால் மறு பிறவி இல்லாமல் செய்யும் மீனாட்சி

மதுரையில் பல அதிசயங்கள் நடக்கும். அதன்படி, மீனாட்சி அம்மன் தினமும் பல விதமான சக்திகளாக உருவகப்படுத்தி ஆராதிக்கப்படுகிறாள். இது வேறு எந்த கோவிலிலும் இல்லாத சிறப்பாகும்.

| |
|---|
| 68 நாழிகை வரையில் புவனேஸ்வரியாகவும், |
| 1215 நாழிகை வரையில் கௌரியாகவும், |
| மதியானத்தில் சியாமளாகவும், |
| சாயரட்சையில் மாதங்கியாகவும், |
| அர்த்த ஜாமத்தில் பஞ்சதசியாகவும், |
| பள்ளியறைக்கு போகையில் ஷோடசியாகவும் |

அன்னையை உருவகப்படுத்தி ஆராதிக்கப்படுகிறாள்.

அன்னைக்கு ஐந்து கால பூஜைகள் நடக்கும் போது, மேலே சொன்ன ரூபங்களுக்கு ஏற்ற வாறு தான் அலங்காரங்கள் செய்விக்கப்படும்.

காலையில் சின்னஞ்சிறு சிறுமி போன்றும், உச்சிக்காலத்தில் மடிசார்புடவை கட்டியும்,மாலை நேரத்தில்தங்க கவச மும்,வைரக் கிரீடமும் அணிந்தும், இரவு அர்த்த ஜாமத்தில் வெண்பட்டு புடவை அணிந்தும் அன்னை காட்சி தருவாள்.

அன்னையின் ஒவ்வொரு காட்சி யையும் காண கண்கோடி வேண்டும். ஒரே நாளில் இந்த அத்தனை ரூபத்தினையும் தரிசிப்பவர்களும் மறுப்பிறப்பு கிடையாது.

எல்லா கோவில்களையும் போல, மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலும் போல பள்ளியறை அம்மன் சன்னதியில் இருக்கிறது. இரவு சுந்தரேஸ்வரரது வெள்ளிப் பாதுகைகள் சுவாமி சன்னதி யிலிருந்து பள்ளியறை வரும்.

பாதுகைகள் வந்த பின் அன்னைக்கு விசேஷ ஆரத்தி மூக்குத்தி தீபாராதனைநடக்கும். அதன் பின்னரே அம்பிகையின் சன்னதி மூடப்பட்டு பள்ளியறையில் பூஜை, பால்,பழங்கள், பாடல்கள்,வாத்ய இசை என்று சகல உபசாரங்களுடன் இரவு கோவில் நடை சார்த் தப்படும்.

மதுரையில் பள்ளியறை பூஜை பார்க் கப் பார்க்கத் திகட்டா காட்சி.பள்ளியறை பூஜை சிவசக்தி ஐக்யத்தை உணர்த்துவதால் இந்த தரிசனத்திற்கு சிறப்பு அதிகம்.

மேலும் கணவன் மனைவி ஒற்றுமைக்கு மதுரை மீனாட்சி கோவிலில் தினமும் நடைபெறும் பள்ளியறை பூஜையை தரிசித்தால் நல்ல பயனைக் கொடுக்கும்.

பிள்ளை வரம் வேண்டுவோர்காலையில் மீனாட்சி அம்மனின் சிறுபிள்ளை அலங்காரத்துடன் நடக்கும் ஆராதனையை தரிசித்து மனமுருகி வேண்டினால், அன்னை பலன் தருவாள் என்கின்றனர்.

வியாபார நஷ்டத்திற்கு தொழில் மற்றும் வேளையில் பிரச்சனை உள்ளவர்கள் அன்னையின் வைர கிரீட அலங்காரத்தினை கண்டு தரிசித்தால் முன்னேற்றம் பெறலாம் என சொல்கின்றனர்.



# மதுரையில் வாழ்ந்தாலே மோட்சம்?

எங்கும் நிரம்பிய பரம்பொருளாகிய சிவபெருமான் அருள் கொண்டு 64 திருவிளையாடல் செய்தருளிய புண்ணிய திருத்தலம் மதுரை. இது பூலோக சிவலோகம் என சிறப்பிக்கப்படுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் பெருமை பெற்ற தலம் இது. விசேஷமான சிவத்தலங்கள் 68. இவற்றில் கைலாயம் முதலான 16 தலங்கள் மிகவும் சிறந்தவை. இந்தப் பதினாறில் காசி, காளஹஸ்தி, சிதம்பரம், மதுரை ஆகிய நான்கும் மிகமிக சிறந்தவை.

காசிக்குப் போய் இறந்தால் மோட்சமும், காளஹஸ்தியில் பூஜை செய்தால் மோட்சமும், சிதம்பரத்தில் தரிசிக்க மோட்சமும், மதுரையில் வாழ்ந்தாலே மோட்ச கதி கிடைக்கும் என்றும் ஹாலாஸ்ய மஹாத்மியம் விளக்குகின்றது.

இவ்வுண்மையை சிவபெருமான் பார்வதிதேவிக்கு கூறியதாகவும், அச்சமயம் அம்பிகையின் மடியில் அமர்ந்திருந்த முருகப்பெருமான் உலகமக்கள் உய்யும் பொருட்டு திருவுள்ளம் கொண்டு இவ்வுண்மையை அகத்தியர் வாயிலாக சங்கர சம்ஹிதையிலும், பரஞ்சோதி முனிவர் மூலம் திருவிளையாடல் புராணத்திலும் வெளியிட அருள் புரிந்ததாகவும் கூறுவர்.

# மதுரை மீனாட்சியம்மன் பிரசாத குங்குமத்தில் காந்தம் பரிசோதித்து பார்த்த வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்

மதுரை மீனாட்சி குங்குமம் காந்தசக்தி மிக்கது என்கிறார் இங்கிலாந்து அறிஞர் சார்லஸ் டபிள்யூ லெட்பீட்டர். இவர் ஒருமுறை மீனாட்சியம்மன் கோயிலுக்கு வருகை தந்தார். அங்கே அவருக்கு குங்கும பிரசாதம் கொடுத்தார்கள். அடுத்து, சுந்தரேஸ்வரர் சந்நிதிக்கு சென்ற போது விபூதி தரப்பட்டது. இதை ஏன் இந்திய மக்கள் நெற்றியில் இட்டுக் கொள்கிறார்கள் என்பதை அறிய அவருக்கு ஆவல். உடனே, அதை பரிசோதனை செய்தார். அவற்றிலிருந்து காந்தசக்தி வெளிப்பட்டதை உணர்ந்தார். இது என் வாழ்வில் நான் கண்ட அதிசயம் என தான் எழுதிய தி இன்னர் லைப் என்ற புத்தகத்தில் எழுதினார்.

இதை விட அதிசயம் ஒன்று உண்டு என்றும் அவர் சொல்கிறார்.

சில ஆண்டுகள் கழித்தபிறகு, அந்த குங்குமம், விபூதியை பரிசோதனை செய்தார். அப்போதும், முன்பு கண்ட அதே அளவு காந்தசக்தி சற்றும் குறையாமல் வெளிப்படுவது கண்டு அசந்து போனார். இப்படி ஓர் அதிசயத்தை நான் எந்த நாட்டிலும் கண்டதில்லை என்று அவர் எழுதி வைத்திருக்கிறார். நாம், மீனாட்சி குங்குமத்தை கோயில் தூண்களில் கொட்டி வைத்து பாழாக்கிக் கொண்டிருக்கிறோம். இனிமேலாவது, அன்னையின் குங்குமத்தை அளவோடு வாங்கி, பூஜையறையில் பத்திரமாக வைப்போம்.

# பல லட்சம் மக்கள் கூடுவதில் உள்ள ரகசியம்

எந்த வழியிலாவது இறைநிலை அடைந்தால் போதும் என்றுதான் அனைத்து மக்களும் பக்தி மார்க்கத்தில் அடியெடுத்து வைக்கின்றனர், இதற்காக பல்வேறு பூஜை,யாகம், யோகம் போன்றவற்றை எந்தவித சுனக்கம் இன்றி செய்யமக்கள் தயங்குவதில்லை. இப்படி பட்ட சூழ்நிலையில், ஒரே இடத்தில் பிரபஞ்ச சக்திகள்அனைத்தையும் சூட்சுமமாக தரிசிக்கலாம் என்றால் கண்டிப்பாக மக்கள் அந்த இடத்தில் ஈ மொய்ப்பதைப் போன்று மொய்க்கவே செய்வார்கள். இதற்கு சான்றாகத்தான் மதுரை சித்திரைத் திருவிழா.

உலகில் உள்ள அத்துனை தேவர்களும், மகரிஷிகளும், சித்தர்களும்,பூத கணங்களும், அனைத்து தெய்வங்களும் மதுரையில் மீனாட்சி, சுந்தரேஸ்வரரின் திருமணம் நடந்த போது கலந்து கொண்டதாக புராணங்கள் கூறுகின்றன.

பூலோகத்தில் ஒன்று கூடும் இறைசக்திகளுடன் மக்களும், ஒன்று கூடி இவர்களின் ஆசிகளைப் பெறுவதற்காக பல லட்சம் பக்தர்கள் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமண நிகழ்வில் கலந்து கொள்வ தாக கூறப்படுகிறது.






மதுரை கலையகம்

கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள், தொம்பைகள், பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.

V.சுந்தரவடிவேல்

Visit:
www.maduraikalaiyagam.com
Cell: 98428 05939

27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1




aanmeegamalar.com

# உலகம் போற்றும் சித்திரை திருவிழா



வருடத்தின் முதல் மாதமானசித்திரை துவக்கத்திலேயே தமிழகத்தில் விழாக் கோல மாதமாகவே துவங்கும், அதுவும் குறிப்பாக சித்திரை என்றால் அனைவரது நினைவுக்கு வருவது சகோதர சகோதரி பாசத்தை குறிக்கும் மதுரை சித்திரை திருவிழாதான்.

மதுரை, இந்த பெயரை உலகறிய செய்தது மீனாட்சி அம்மன் கோவில். உலக அதிசயங்களில் ஒன்றாக இடம் பெற போட்டி போட்ட இந்த ஆலயத்தால் மதுரைக்கு என்றென்றும் புகழ்தான்.

உள்நாட்டவர் மட்டுமின்றி, வெளி நாட்டவரும் தினமும் வந்து வியந்து பார்ப்பது இங்குள்ள மீனாட்சிசொக்கநாதர் ஆலயத்தை தான், கோவிலின் கட்டமைப் புகள் அதனை சுற்றியுள்ள அமைதியான சூழல் போன்றவை பலரையும் கவர்ந் திருக்கின்றன.

உலகப்புகழ் பெற்ற கோவிலை கொண்டாட மதுரையில் மக்கள்போற்றும் ஓர் உன்னத திருவிழா தான், சித்திரை திருவிழா. மீனாட்சி அம்மனின் பட்டாபி ஷேகம், திக் விஜயம், சொக்கநாதருடன் திருக்கல்யாணம், தேரோட்டம் என களை கட்டி காணப்படுவது சித்திரைபெருவிழா.

இந்த விழாவைக்காண மதுரை மாவட்டம் மட்டுமின்றி, தென், வட மாவட் டங்களில் இருந்தும் ஏராளமானோர் குவிவது வழக்கம்.

மீனாட்சியின் திருவிழா மட்டுமல்ல கள்ளழகரின் மதுரை விஜயமும், வைகை ஆற்றில் இறங்கும் வைபவமும் சித்திரை திருவிழாவின் மற்றுமொரு விசேஷம். கோவிலில் இருந்து புறப்பட்டு, மதுரை வந்து மீண்டும் அழகர் தனது இருப் பிடம் திரும்பும் வரை விழாக்கோலம் தான். திருக்கண் மண்டக படிகளில் எழுந்தருளும் அழகரை காணவும், அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை பார்க்க வும் திரளும் கூட்டம், பொங்கி வரும் தண்ணீரை விட வேகமானதாகும்.

இதற்கு யாரும் அணை போட முடியாது. சித்ரா பவுர்ணமி நாளில், கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் காட்சியை காண கூடும் பல லட்சக் கணக்கான பக்தர்கள் கூட்டம் ஒவ்வொரு ஆண்டு அதிகரித்தே உள்ளது. மதுரையில் மட்டும் மின்றி வைகைஆறு பாயும் மானாமதுரை, பரமக்குடி ஆகிய நகரங்களில் பத்து நாட்கள் வைகைஆற்றிலே தினமும் நடைபெறும் திருவிழாவாக உள்ளது.

இங்கு சித்திரை பௌர்ணமி நாளில் நடைபெறும் நிலாசோறு திருவிழா இரவு முழுவதும் விடிய விடிய நடைபெறும். இதில் சர்வ அலங்காரத்தில் காட்சி தரும் கள்ளழகரை காண ஆயிரக்கணக்கான பக்தர்கள் குடும்பத்துடன் வந்து வழிபாடு செய்வார்கள்.


மீனாட்சியம்மன் கோவில் திருவிழா வையொட்டி தமிழகத் தில் பல கோவில் களில் சித்திரைமாதம் விழாக் கோலம் காணுவது சிறப்பு.




உ

ஐஸ்வர்யா ஜாதகாலயா

AISHWARYAA JATHAKALLAYA



கல்வியில் சிறந்து விளங்க, நல்ல வேலை தொழில் அமைய (உள்நாடு மற்றும் வெளிநாடு), திருமண பாக்கியம் பெற, குழந்தை பாக்கியம் பெற, நீதிமன்ற வழக்குகள் சாதகமாக முடிய, நிலம், வீடு, வாகன யோகம் பெற, கடன் நிவர்த்தி பெற, தொழில் விருத்தி பெற, உடல் ஆரோக்கியம், ஆயுள் பலம் பெற, சர்வரோக நிவாரணியாக ஜோதிட அடிப்படையிலும், வாஸ்து முறைப்படியும், பரிஹார பூஜைகள் மூலம், சகல சௌபாக்கியம் பெற எந்திர, தந்திர, மந்திர, யந்திர, பிரயோகம் மூலம் சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்படும்.

அடிப்படை ஜாதகம், பலன் | முழுநீள ஜாதகம், பலன் | பிறந்தநாள் வருடப்பலன் | திருமண ஜாதகப் பொருத்தம்
முகூர்த்த தேதி மற்றும் நேரம் | அதிஷ்டப் பெயர் சூட்டுதல் | வாஸ்து | அதிஷ்டம் தரும் கற்கள் | எண் கணிதப் பலன்

TAMIL, ENGLISH, HINDI, TELUGU, KANNADA, MALAYALAM AND MORE LANGUAGES | Also Provides Astrological Services "Anywhere in the World" You Can Contact:

ஐஸ்வர்யா ஜாதகாலயா திருமண தகவல் மையம் (அனைத்து ஜாதி, மதம்)

கே.எஸ்.ரவீந்திரன், வேத சாஸ்திர ஜோதிடர்
K.S.Ravindhran, Vedic Astrologer

#55, கவரை தெரு, மேற்கு மாம்பலம் (A.M.R கல்யாண மண்டபம் அருகில்), சென்னை-33.
#55, Kavarai Street, (Near: A.M.R Kalyana Mandapam) West Mambalam, Chennai-33.

98841 41870 | 98841 47630

WebSite: www.aishwaryajathakalaya.com | Our Youtube: aishwaryajathakalaya

# 48 ஆண்டாக அணையாமல் எரிந்த சொக்கநாதர் கருவறை தீபம்

இந்தியாவில் முகலாயர்கள் படையெடுப்பின் போது காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பல்வேறு கோவில்களை சிதைத்து பல்வேறு வகையான கொள்ளைச் சம்பவங்களை நிகழ்த்தி வந்தனர்.

அந்த வகையில் தமிழகத்தில் பிரசித்தி பெற்ற கோவில்களும் பாதிப்படைந்தன, மீனாட்சி அம்மன் கோவிலை பாதுகாக்க பக்தர்கள் முற்பட்டனர்.

1330–ம் ஆண்டு முகலாயர்கள் படையெடுப்பின்போது அம்பாளையும், சுவாமியையும் உடைத்து நொறுக்க முயற்சி நடந்தது.



அதன்படி மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள சொக்கநாதர் சன்னதி கருவறை 48 ஆண்டுகளாக மூடப்பட்டுஇருந்தது.

கோயில் ஸ்தானிகர்கள் கருவறை வாயிலை கற்சுவர் கொண்டு மூடி, கருவறைக்கு முன்பு அர்த்த மண்டபத்தில் வேறொரு சிவலிங்கத்தை அமைத்தனர். அன்னியர்கள் அந்த சிலைதான் சுந்தரேஸ்வரர் என்று நினைத்து அதை முடிந்த அளவு சிதைத்தனர்.

முகலாயர் படையெடுப்பு ஒரு முடிவுக்கு வந்தது, நாட்கள், மாதங்கள், வருடங்கள் என ஓடியது, ஆனாலும், சுந்தரேஸ்வரர் சன்னதி 48 ஆண்டுகளாக அடைக்கப்பட்டு பூஜை இல்லாமல் இருந்தது.

கம்பண்ணர் என்ற வீரர் அன்னியர்களை வென்று மீண்டும் கருவறையை திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டனர், கருவறையை திறந்தனர். அப்போது 48ஆண்டுகளுக்கு முன்பு பூசப்பட்ட சந்தனம் நறு மணம் வீசியது. சிவலிங்கத்தின் இருபுறமும் ஏற்றி வைக்கப்பட்ட வெள்ளி விளக்குகள் அணையாமல் எரிந்துகொண்டு இருந்தது.

சிதைக்கப்பட்ட அந்த சிவ லிங்கமும் தற்போது சுவாமி சன்னதியை ஒட்டி, பிரகாரத்தில் உள்ளது. அதன் அருகிலேயே இந்த வரலாறும் இடம் பெற்றுள்ளது.

## மீனாட்சி அம்மன் கோவில் கட்டபட்ட ஆண்டு விவரம்!

கோவிலும் பொற்றாமரை குளமும் சங்க காலத்திற்கு முன்பே அதாவது 2300 முதல் 3600 ஆண்டுகளுக்கு முன்னரே உருவாக்கப்பட்டது. அதன் பின் வருமாறு.

| | |
|---|---|
| 1168 – 75 | சுவாமி கோபுரம் |
| 1216 – 38 | கிழக்கு ராஜ கோபுரம் |
| 1627 – 28 | அம்மன் சந்நிதி கோபுரம் |
| 1315 – 47 | மேற்கு ரா கோபுரம் |
| 1372 – | சுவாமி சந்நிதி கோபுரம் |
| 1374 – | சுவாமி சந்நிதி வெஸ்ட் கோபுரம் |
| 1452 – | ஆறு கால் மண்டபம் |
| 1526 – 100 | கால் மண்டபம் |
| 1559 – | தெற்கு ராஜ கோபுரம், முக்குறுணி விநாயகர் கோபுரம் |
| 1560 – | சுவாமி சந்நிதி நார்த் கோபுரம் |
| 1562 – | தேரடி மண்டபம் |
| 1563 – | பழைய ஊஞ்சல் மண்டபம், வன்னியடி நட்ராஜர் மண்டபம் |
| 1564 – 72 | வடக்கு ராஜா கோபுரம் |
| 1564 – 72 | வெள்ளி அம்பல மண்டபம் கொலு மண்டபம் |
| 1569 – | சித்ர கோபுரம், ஆயிராங்கால் மண்டபம், 63 நாயன்மார்கள் மண்டபம் |
| 1570 – | அம்மன் சந்நிதி மேற்கு கோபுரம் |
| 1611 – | வீர வசந்தராயர் மண்டபம் |
| 1613 – | இருட்டு மண்டபம் |
| 1623 – | கிளிக்கூட்டு மண்டபம், புது ஊஞ்சல் மண்டபம் |
| 1623 – 59 | ராயர் கோபுரம், அஷ்டஷக்தி மண்டபம் |
| 1626 – 45 | புது மண்டபம் |
| 1635 – | நகரா மண்டபம் |
| 1645 – | முக்குருணி விநாயகர் |
| 1659 – | பேச்சியக்காள் மண்டபம் |
| 1708 – | மீனாக்ஷி நாயக்கர் மண்டபம் |
| 1975 – | சேர்வைக்காரர் மண்டபம் |

உலகின் அதிசயங்களில் முதலிடத்தில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் திகழ வேண்டும் அந்த அளவிற்கு அக்கோயில் அதிசயங்கள் புதைந்துள்ளது.

## மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் சிறப்புகள்

மீனாட்சி அம்மனின் மற்றொரு பெயர் அங்கயற்கண்ணி, மீனாட்சி அம்மனின் அப்பா, அம்மா மலயத்துவசன், காஞ்சனமாலை, மீனாட்சி அம்மனின் சிலை மரகதக்கல்லினால் ஆனது.

மீனாட்சி அம்மன் வலது கையில் கிளி வைத்திருப்பார், மீனாட்சி அம்மன் கோயில் குளத்தின் பெயர் பொற்றாமரைக் குளம், மீனாட்சி அம்மன் கோயில் விமானத்தின் பெயர் இந்திர விமானம்.

பஞ்ச சபைகளில் மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள சபையின் பெயர் வெள்ளியம்பல சபை. மீனாட்சி அம்மன் கோயிலில் கால் மாறி நடனமாடியவர் நடராஜர்.

மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள மிகப்பெரிய விநாயகர் பெயர் முக்குறுணி விநாயகர். மதுரையில் சிவபெருமானுக்குத் தொண்டு செய்த நாயன்மார் மூர்த்தி நாயனார், நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என கூறியவர் நக்கீரர்.

மீனாட்சி அம்மன் கோயிலிலுள்ள கோபுரங்கள் 14 கோபுரங்கள்.

மீனாட்சி அம்மன் கோயிலின் மிக உயரமானது தெற்கு கோபுரம். மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள புகழ்பெற்ற மண்டபம் ஆயிரங்கால் மண்டபம், மேலும் மீனாட்சி அம்மன் நவகிரக ஸ்தலங்களில் புதன் ஸ்தலமாகவும் விளங்குகிறது.






# முக்குறுணி விநாயகர்



மதுரை மீனாட்சி அம்மன்கோவிலில் முக்குறுணி விநாயகர் மிக பிரம்மாண்டமாக காட்சியளிக்கிறார்.

மீனாட்சி அம்மன் சன்னதியிலிருந்து, சுவாமி சன்னதிக்குச் செல்லும் வழியில் 8 அடி உயரத்தில் அருள்பாலிக்கிறார். ஒரு குறுணி என்பது 6 படி. இவ்விநாயகருக்கு 3 குறுணி, அதாவது 18படி பச்சரிசிமாவால் ஆன கொழுக்கட்டை, விநாயகர் சதுர்த்தி நாளன்று இவ்விநாயகருக்குப் படைக்கப்படுகிறது. எனவே இவ்விநாயகருக்கு முக்குறுணி விநாயகர் என்ற பெயர் நிலைத்துவிட்டது.

மதுரை மன்னரான திருமலை நாயக்கர், வண்டியூரில்தெப்பக்குளம் வெட்டும்போது, கண்டெடுக்கப்பட்ட இவ்விநாயகரை மீனாட்சியம்மன் கோயிலில் வைத்து வழிபட்டனர்.

முக்குறுணி விநாயகர் முன்புள்ள நிலை விளக்குகளில் திருமலை நாயக்கரின் உருவமும், அவரது குடும்பத்தினரின் உருவங்களும் உள்ளன.

# உலக சிவ பக்தர்கள் சங்கமிக்கும் திருவிழா
# மதுரை மீனாட்சி திருக்கல்யாணம்

மதுரையை ஆண்டுவந்த மலையத் துவஜன் என்ற பாண்டிய மன்னனும், இவரது மனைவி காஞ்சனமாலையும் குழந்தை பாக்கியத்துக்காக பார்வதி, பரமசிவனை வேண்டி யாகம் நடத்துகின்றனர்.

மனமிரங்கிய பார்வதி தானே 3 வயதுப் பெண் குழந்தையாகநெருப்பில் இருந்து வந்து காஞ்சனமாலையின் மடியில் வந்து விழுகிறாள். குழந்தையைப் பார்த்து மகிழ்ந்து போன அரசனும், அரசியும் அந்தக் குழந்தை மூன்று ஸ்தனங்களுடன் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைகின்றனர்.

அப்போது வானில் தோன்றிய அசரீரி இவளை ஒரு ஆண்பிள்ளை போல வளர்த்து பட்டத்து ராணியாக முடிசூட்டுங்கள். மணப் பருவம் வந்த உடன் அவளது மூன்றாவது ஸ்தனம் மறைந்து விடும் என்கிறது.

மீனாட்சி ஆணுக்கு நகரான அனைத்து வகைபோர்க் கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர். மதுரையின் அரசியாக, மங்கையர்க்கரசி மீனாட்சிக்கு பட்டாபிஷேகம் நடக்கிறது.

மூன்று தனங்களுடன் பிறந்த மீனாட்சி, எந்த மன்னனைப்பார்க்கும் போது ஒரு தனம் மறைகிறதோ, அவரையே திருமணம் செய்துகொள்வார் என்று மலையத் துவஜ மன்னன் கூறுகிறான். பட்டாபிஷேகதிற்குப் பிறகு மதுரையிலிருந்து படையுடன் கிளம்பி, ஒவ்வொரு திக்கிற்கும் சென்று போர்தொடுக்கிறார்மீனாட்சி.



பூமியில் உள்ள ஒவ்வொரு மன்னனையும் வெற்றி கொள்கிறார். அவ்வாறு கிழக்குதிசையில் அவர் சென்ற போது, அமராவதி நாட்டின் மன்னனான இந்திரன் மீனாட்சியுடன் போர் செய்கிறான். ஆனால் மீனாட்சியின் வீரபராக்கிரமத்திற்கு ஈடு கொடுக்காமல் பணிகிறான்.

இப்படி ஒவ்வொருதிசையிலும்போர் தொடுத்து அனை வரையும் தன் காலில் விழச் செய்கிறார் மீனாட்சி.

இதேபோல, கயிலாயத்தின் மீது படையெடுத்து செல்கிறார் மீனாட்சி. அங்கு குடியிருக்கும் சிவபெருமான் மீனாட்சியை யார் என்று அறிந்தவர் ஆதலால், உற்சாகத்துடன் அன்னையை எதிர்கொள்ளச் செல்கிறார்.

படையுடன்வீரம் கொப்பளிக்க நின்று கொண்டிருக்கிறார் மீனாட்சி. எதிர்ப்புறத்தில் சிவபெருமான் வந்து கொண்டிருக்கிறார்.

சிவபெருமான் நெருங்கி வர வர அன்னையின் உள் ளத்தில் வெற்றி வேட்கை குறைந்து வெட்கம் குடிகொள்கிறது.

சிவபெருமான் அருகில் வர வர தனது கையில் இருந்த வாளைகீழே போட்டு விட்டு தலை குனிகிறார். அப்போது மீனாட்சியின் மூன்றாவது தனம் மறைகிறது. தனது மனாளனைக் கண்ட பூரிப்பில் ஆழ்ந்து நிற்கிறார் அன்னை.

அப்போது சிவபெருமான், "அங்கயற்கண்ணியே நீ என்று மதுரையம்பதியை விட்டு படையுடன் கிளம்பினாயோ அன்றே நானும் உன்னைப் பின் தொடர ஆரம்பத்து விட்டேன். இன்றுதான் உன்னை நேரில் காண்கிறேன். இனிமேல் நீயே என் துணைவி" என்று கூறவே அன்னையின் முகம் வெட்கத்தால் சூரியனைப் போல சிவந்தது.

உலகையே வென்று, மனாள னைக் கண்ட அன்னைக்கு நடைபெறும் திருமண நிகழ்வு மதுரையில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

உலகெங்கும் உள்ள சிவ பக்தர்கள் அம்பாளின் திரு மண வைபவத்தைக் காண சித்திரை மாதத்தில் மதுரையில் ஒன்று கூடுவதாக கூறப்படுகிறது.

"குடும்பத்தோடு ஆரோக்கியம் பெறுவோம்"
சித்த வைத்தியத்தை நாடுவீர் ! பக்க விளைவற்ற நிவாரணம் பெறுவீர் !!
"பொன்விழா கண்ட நாயகர்" சித்த மருத்துவ செம்மல்
"செவாலியர்" Lion.Dr.S.வரதராஜன் R.S.M.P., D.Y.N., அவர்கள்
நாள்பட்ட தீராத அனைத்து நோய்களுக்கும் சித்த மருத்துவ ஆலோசனை பெறலாம்.
ஆண், பெண் இரகசிய நோய்கள்

- மூட்டுவலி
- முழங்கால் வலி
- தலைவலி
- ஒற்றைத் தலைவலி
- தோல் நோய்கள்
- மகளிர் மருத்துவம்
- சளித்தொல்லைகள்
- மூலம், பௌத்திரம்
- சிறுநீரக நோய்கள்
- பித்தப்பை கல்
- சர்க்கரை நோய்
- குழந்தைகள் மருத்துவம்

மருந்துகள் கிடைக்குமிடம் : சோலைமலை Dr.வரதாஸ் மருந்தகம்


பரமக்குடி. டாக்டர்
Dr.S.வரதராஜன்

தலைமை (பரமக்குடி)
7/325, நேதாஜி தெரு,
காந்திசிலை அருகில், பரமக்குடி - 623707.
செல் : 97509 26843, 93443 91581

தலைமை கிளை (மதுரை)
69, தெற்கு மாசி வீதி,
கான்சா மேட்டுத் தெரு, மதுரை.
Ph : 0452 - 2344080, Cell : 92452 93862

கிளை (மதுரை)
1/45, மீனாட்சி நகர் 1வது மேற்கு குறுக்கு தெரு,
கருணாநிதி தெரு, வில்லாபுரம், மதுரை - 12.
செல் : 99765 33353

கிளை (பரமக்குடி)
5/19, நந்தவனம் அண்ணாமலை விநாயகர் ஆலயம்
அருகில், நவீன் பேக்கரி அருகில்,
பரமக்குடி - 623707.
செல் : 97862 23953

கிளை (மதுரை)
5, பூசாரி தோப்பு தெரு,
முனிச்சாலை, மதுரை - 625 009.
Cell : 75503 95687

கிளை (இராமநாதபுரம்)
176/6, சப்தகரி / வணிக வளாகம்,
இராமநாதபுரம்.
Cell : 91760 93353

இந்த முகவரியில் ஆலோசனை நாட்களில் மருத்துவரை சந்திக்கலாம்.

aanmeegamalar.com

2,000 நாட்களுக்கும் மேலாக..

# ஆதரவற்றோருக்கு அன்னமிடும் மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட்



திருப்பதியில் சாதுர் மாஸ்ய விரதம் மேற்கொண்டிருக்கும் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளுக்கு மதுரை மஹா பக்த ஜனங்கள் பிக்ஷா வந்தன கமிட்டி சார்பில் வெங்கடேசன் ஸ்ரீராமன், நெல்லை பாலு ஆகியோர் மீனாட்சி அம்மன் கோவில் பிரசாதம் வழங்கி ஆசி பெற்ற போது எடுத்த படம்



ஆவணி அமாவாசையை முன்னிட்டு மதுரையின் அட்சய பாத்திரம் டிரஸ்ட் சார்பில் தெப்பக்குளம் முக்தீஸ்வரர் கோவிலில் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் அன்னதானம் வழங்கிய போது எடுத்த படம் அருகில் டிரஸ்ட் சேர்மன் நெல்லை பாலு உள்ளார்.



மதுரையில் நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்வில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் மதுரையின் அட்சய பாத்திரம் டிரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலுவிற்கு சிறந்த சமூக சேவகருக்கான விருதினை வழங்கி கௌரவித்த போது எடுத்த படம். அருகில் மதுரை மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளர் அரவிந்த் உள்ளார்

'தனி ஒருவனுக்கு உணவில்லை என்றால் ஜகத்தினை அழித்திடுவோம்!' என்றான் பாரதி. 'வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினார்' வள்ளலார்.

உலகில் கொடுமையான நோய் ஒன்று உண்டென்றால் அது பசி மட்டும்தான். எனவே தான், 'பசிப்பிணி' என்கிறோம். பசி வந்தால் பத்தும் பறந்து போய்விடும். சூழல் காரணமாக ஆதரவற்றோராக ரோட்டில் அனாதைகளாக இருப்போருக்கு, கடந்த 2,200 நாட்களாக தினமும் மதிய உணவினை வழங்கி வருகிறது மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட்

வயதான பெற்றோருக்கு மூன்று வேளை சோறு போட்டு பராமரிப்பதையே பாரமென நினைக்கும் இந்த காலத்திலும், இவரது சேவை ஆச்சரியம் தருகிறது.

தினமும் மதிய வேளையில் மதுரையில் ரயில்வே ஸ்டேஷன், சாலையோரம் மற்றும் அரசு பொது மருத்துவமனை 10 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உணவின்றி வாடுபவருக்கு அன்னம் வழங்குவதை தனக்கு இட்டபணியாக செவ்வனே சேவை செய்து வருகிறார் மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலு.

பூமியில் கடன் இல்லாத மனிதர் என யாருமில்லை. 'தெய்வக் கடன், ரிஷி கடன், பித்ரு கடன், மனுஷ கடன்' என நான்கில் ஒரு கடனோடு தான் பிறப்போம் என்கின்றன சாஸ்திரங்கள். கடன் இருப்பதால்தான், பிறப்பே உண்டாகிறது.

பித்ரு கடனை அடைக்க சாஸ்திரம் சுட்டிக் காட்டும் வழி 'அன்னதானம்'. பித்ரு சாபங்கள் இருந்தால், பிள்ளைகள் விருத்தி இல்லாமல் இருப்பது போன்ற பல தீமைகள் வீட்டில் அரங்கேறும் என்பர். இவற்றையெல்லாம் போக்கி முன்னோர் ஆசிர்வாதம் பெற்று, நம் சந்ததியினர் மகிழ்வோடும் ஆரோக்கியத்தோடும் வாழ ஒரே வழி 'அன்னதானம்!' மட்டுமே.

மனிதரில் தன் பசியை போக்க முடியாத இயலாமையில் உள்ள முதியோர்களும், மாற்றுத் திறனாளிகளும் இன்றும் இருக்கிறார்கள். அவர்களுக்கு தினமும் வயிற்றுப் பசி போக்கும் அரும் பணியைச் செய்து வருகிறது 'மதுரையின் அட்சய பாத்திரம்'.

இந்த டிரஸ்ட்க்கு தாங்கள் உதவி செய்வதன் வாயிலாக, அன்னமிட்டு உங்களது முன்னோர் சாபத்தை போக்கி ஆசி பெறலாம்.





மதுரை எஸ்.எஸ்.காலனி காஞ்சி மகா பெரியவர் கோயிலில் நடைபெற்ற அனுஷம் உற்சவத்தில், மணிமேகலை பிரசாரம் நிர்வாக இயக்குனர் ரவி தமிழ்வாணனுக்கு, ஓய்வு பெற்ற காவல் கண்காணிப்பாளர் மணிவண்ணன் 'ஸ்ரீ மஹா பெரியவா' விருது வழங்கினார். உடன் மதுரை அனுஷத்தின் அனுக்கிரகம் நிறுவனர் நெல்லை பாலு மற்றும் வேத விற்பன்னர்கள்.

### நீங்களும் உதவ..

மதுரையின் அட்சயப்பாத்திரம் ட்ரஸ்ட்க்கு உதவ விரும்புவோர், கீழ்க்கண்ட அக்கவுண்ட் (அ) ஜிபே, போன் பே மூலமாகப் பணம் செலுத்தலாம். டிடி., மணி ஆர்டர்களும் அனுப்பலாம்.

Maduraiyun Atchaya Paathiram Trust,
AC No: 110031396472, Canara bank - Madurai West Avani Moola Street Branch,
IFSC: CNRB0001010 MICR: 625015006.
GPay & Phonepay: +91 94426 30815

தொடர்புக்கு: Rtn.நெல்லை பாலு,
நிறுவனர் மதுரையின் அட்சய பாத்திரம் டிரஸ்ட், ஜி 102, சாந்தி சதன் குடியிருப்பு, கோச் சடை, மதுரை 625 016, செல்: +91 94426 30815

# நோய்களை தீர்க்கும் நூபுர கங்கை தீர்த்தம்

அழகர்மலை உச்சியில் உள்ள நூபுர கங்கையை சுமார் 3மணி தூரம் நடந்து சென்றால் அந்த அபூர்வ அதிசய கங்கை தீர்த்தத்தை காணலாம்.

இந்த தீர்த்தம் திருமாலுடைய திருவடி சிலம்பில் இருந்து உற்பத்தியாகி பெருகி வழியும் தனி பெருமையுடையது.



மகாபலிசக்கரவர்த்தியிடம்வாமன அவதாரம் எடுத்த பெருமாள் மூன்றடி மண் கேட்டார். அவரும் தந்தேன் என்றார். உடனே வாமனர் விசுவரூபம் எடுத்து மூன்று உலகங்களையும் தனது திருவடிகளால் அளந்தார், மூன்றாவது அடி இடத்தை எங்கே அளந்துகொள்வது என்றுவாமனரை பார்த்து பெருமாள் வினவினார்.

அதற்கு தனது சிரத்தை வாமனர் காட்டினார். தனது திருப்பாதத்தை வைத்து வாமனரை அதல பாதாளத்தில் அமிழ்த்தி விட்டார். பெருமாள். இந்த பிரமாண்ட மான அவதாரத்திற்கு திருவிக்கிரம அவதாரம் என்று பெயர்.

இதில் பெருமாள் முதலடியை மண்ணில் வைத்துவிட்டு இரண்டாவது அடியை விண்ணில் வைக்க தனது திருப்பாதத்தை ஆகாயத்தில் உயர்த்திய போது அங்கிருந்த பிரம்மா, தனது தந்தையின் பாதம் என்பதை அறிந்து தனது கமண்டல நீரினால் பூஜை செய்தார்.

அப்போது பகவானின் பாதங்களிலிருந்து பொற்சிலம்பு அசைந்து அதிலிருந்த நீர்துளிகள் அழகர்மலை மீது விழ அதுவே சிலம்பாறாக பெருக்கெடுத்துஇன்று ஓடி வருகிறது.

இரும்பு சத்து. தாமிரசத்து, மூலிகைசத்து உள்ளிட்ட பல்வேறு மருத்துவ குணங்கள் நிறைந்த அபூர்வ தீர்த்தம் இது ஆகும்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994323622 / 9994162182

துணை ஆசிரியர்கள்: ஷியாம்சுந்தர், ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய், வேல்.

வடிவமைப்பு: SML கிராபிக்ஸ் செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.






30.04.2026 சிறப்பிதழ்
உங்கள் பகுதி கோவில் கும்பாபிஷேகம், விழாக்கள், போன்றவற்றை
இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்
தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203

மதுரை சித்திரைத் திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்
ஹோட்டல் டெம்பிள் சிட்டி A/c
PRODUCT of INDIA
HOME - MADE PODI, PICKLES & VADAGAMS
Scan for Details

NEW JAIL ROAD 86055 13333
THALAVOY STREET 95752 93333
MATTUTHAVANI 98946 83335
PERIYAR BUS STAND 96296 83333
BIBIKULAM 95970 13333
UTHANGUDI 99943 33396
AYYANKOTTAI, NH-44 97913 93333
VADIPATTI, NH-44 97915 93333
SIVARAKOTTAI, NH-44 86082 83333
MADURAI-TENKASAI MAIN ROAD ALAMPATTI, NH-744 97870 08333
RAILWAY JUNCTION 80554 93333
BATLAGUNDU BYPASS 88016 93333
KEEZHADI-87, PASUMALAI, Soon at KARIAPATTI NH-38,
www.templecityfoodproducts.com
www.hoteltemplecity.com
customercare@hoteltemplecity.com
/hoteltemplecity

# மதுரை பெயரும் சிறப்புகளும்

2500 வருடங்கள் பழமையான தமிழ் இலக்கிய வரலாற்றிலும், இந்து சமய வரலாற்றிலும் முக்கியத்துவ மானது. மதுரை நகரானது திருவாலவாய், சிவராஜ தானி, பூலோக கயிலாயம், கடம்ப வனம், நான்மாடக் கூடல், சிவ நகரம், துவாதசாந்தத் தலம், சமட்டி வித்தியாபுரம், கன்னியாபுரம் ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளது.

மதுரை திருபாற்கடலை கடைந்த போது நாகம் உமிழ்ந்த விஷத்தை இறைவன் அமுததாக மாற்றி மதுரமாக்கினமையால் இத்தலம் மதுரை என்று பெயர் பெற்றதென்பர்.

நான்மாடக்கூடல் மதுரையை அழிக்க வருணன் ஏவிய ஏழு மேகங்களையும் தடுக்கும் பொருட்டு சிவபெருமான் தன் சடையிலிருந்து விடுத்த நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்ததால் நான்மாடக்கூடல் என்ற பெயரும் மதுரைக்கு உண்டு என்கிறார்கள் சிலர்.

ஆலவாய் சிவபெருமானின் அணிகலன்களில் ஒன்றான பாம்பு வட்டமாக தன் வாலை வாயினால் கவ்விக் கொண்டு இத்தலத்தின் எல்லையைக் காட்டியதால் ஆலவாய் என்ற பெயர் இத்தலத்திற்கு ஏற்பட்டது என்று ஒரு வரலாறு கூறுகிறது.

## சந்தியாந்ருத்த மூர்த்தி வடிவமான மதுரை வெள்ளியம்பல நடராஜரின் தேவ ரகசியம்!



சந்தியாந்ருத்த மூர்த்தி வடிவமான மதுரை வெள்ளியம்பல நடராஜரை பற்றிய தேவ ரகசியம்!

பிரதோஷகாலத்தில் சிவபெருமான் நடனம் ஆடியதால் அவரது பெயர் சந்த்யாந் ருத்த மூர்த்தி என்றானது. சதாசிவ மூர்த்தி யின் உச்சியில் அமைந்துள்ள ஈசான முகத்திலிருந்து தோன்றிய வடிவமே நடராஜ மூர்த்தியாவார்.

அவரது வடிவமே சந்த்யாந்ருத்த மூர்த்தி போன்ற பல வடிவமாகப் பரந்து விரிந்தது.

இந்த சந்த்யாந்ருத்த மூர்த்தியை தரிசிக்க வேண்டுமானால் நாம் மதுரைக்கு செல்ல வேண்டும்.

பெரும்பாலும் நடராஜர் வலது காலை ஊன்றி, இடது கால் தூக்கி திரு நடனம் புரிந்த நிலையிலேயே அனைத்து ஆலயங்களிலும் இருக்கிறார்.

ஆனால் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் உள்ள வெள்ளியம்பலத்தில் மட்டும் நடராஜர் இடது கால் ஊன்றி வலது கால் தூக்கி தாண்டவம் ஆடுகிறார்.

மதுரை வெள்ளியம்பலத்தில் உள்ள இந்த இந்த சந்த்யாந்ருத்த மூர்த்தியை நாம் வணங்குவோமானால் இவர் நம் தொழில்களை காப்பதுடன் பலகலைகளில் சிறப்பு பெற உதவுவார். என்பது தேவ ரகசியம்.

இவருக்கு செந்தாமரையால் அர்ச்சனையும், தேங்காய் சாத நைவேத்தியமும் திங்கள், புதன் கிழமை மாலையில் செய்ய தடைகள் அகலும், விரோதிகள் ஒழிவர்.


நன்மை பாராட்டுவர். மதுரை வெள்ளியம்பல நடராஜ பெருமானுக்கு பன்னீரால் அபிஷேகம் செய்தால் கல்வியறிவு மேன்மையடையும் என்பது தேவ ரகசியம்.

# திருமண தோஷம், தடை நீக்கும் அழகர் கோவில்

திருமாலிருஞ் சோலை யென்றும், தென் திருப்பதியென்றும் போற்றி அழைக்கப்பட்டும், ஆழ்வார்களால் புகழ்ந்துபாடப் பெற்றும் சிலப்பதிகாரத்தில் இத்திருக்கோவில் பெருமையுடன் கூறப்படும் அழகர்மலை அழகரின் அற்புதங்கள் ஆயிரமாயிரம்.

இது பெரியாழ்வார் ஆண்டாள் திருமங் கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் ஆகிய ஆழ்வார்களால் மங்க ளாசனம் பெறப்பட்ட பெருமைக்குரிய புண் ணிய ஸ்தலமாகும். இக்கோவிலில் மூலவர் ஸ்ரீ பரம சுவாமி ஸ்ரீதேவி, பூதேவி நின்ற திருக்கோலத்தில் கிழக்கு முகம் பார்த்து காட்சி தருகிறார். தாயார் திருநாமம்,கல்யாண சுந்தரவள்ளி தாயாரை திருமணம் தாமதப் படும் பெண்கள் வேண்டினால் திருமணம் விரைவில் நடைபெறுமென்பது ஐதிகம்.

சூடிக்கொடுத்த சுடர் கொடியாள் அழகான அழகர் மீது காதல் கொண்டு அழகரை திருமணம் செய்து கொண்டார். இதனால் தான் இத்தலத்தில் ஆண்டாள் (உற்சவர்) அமர்ந்த நிலை யில் உள்ளார். இத்தலத்தில் உள்ள சக்கரத்தாழ்வார் மிகவும் சக்தி வாய்ந்தவர்.



ஸ்ரீகதர்சன மூர்த்தியின் மேலே இரணிய சம்கார கோலத்துடன் ஸ்ரீநரசிம்மர் காட்சி யளிப்பதுடன் காயத் திரி மந்திரங்கள் எல்லாம் பிம்பமாக இருப்பதும் இங்கு மேலும் தனிச் சிறப்பாகும்.

இ த னா ல் தா ன் வேண்டுவோருக்கு வேண் டிய வரம் அளிக்கும் அழகர் மலை அழகர் என்று இன்றும் அழைக்கப் படுகிறார். மகாவி ஷ்ணு தேவர்களை காப்பாற் றும் பொருட்டு வாமன அவதாரம் எடுத்து மகாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்கேட்டு பின்னர் திருவிக்கிர மராக பிரமாண்ட உருவெடுத்து மூவுலகையும் தனது இரண்டு அடிகளால் அளந்து மூன்றாவது அடியை மகாபலி சக்கர வர்த்தியின் சிரத்தில் வைத்து அமிழ்த்தினார் என்று புராண வரலாறு கூறு கிறது.

அவ்வாறு மூவுலகையும் அளக்க தனது திருப்பாதத் தை வான் நோக்கி உயர்த் தியபோது அந்த திருவடியை மகா விஷ்ணுவின் மகனாகிய பிரம்மா தந்தையின் பாதத் தை கமண்டல நீரினால் பூசித்தார். அப்போது திருவிக்கிரவ பகவானாகிய மகாவிஷ்ணுவின் திருப்பாதத் திலிருந்து ரத்தின பொற்சிலம்பு அசைந்து அதிலிருந்து நீர் துளிகள் அழகர்மலை மீது தெளித்தது. அதுவே சிலம்பாறாக பெருக்கெடுத்து ஓடியது. இதையே நூபுர கங்கை என அழைக்கப்படுகிறது.

HOMELY KITCHEN



VS

FOOD FACTORY

What's The Main Difference?

A: "Irresponsible Chemicals"

(Responsible vs Irresponsible Chemicals)

Chemicals Added In Sweets | Snacks | Sauces | Beverages | Instant Noodles | IceCreams

Colours | Flavours | Nature Identical Flavours | Preservatives | Improvers | Emulsifiers
Stabilisers | Thickening Agents | Gelling Agents | Acidity Regulators | Moisture Retention Agents
Taste Enhancing Powdery Substances | Spice Replacers

and many more harmful additives that will **never be found in any home.**

HOMELY KITCHEN IS THE BEST

THE NEXT BEST RESPONSIBLE KITCHEN

MD COMMUNITY KITCHEN 1980
Responsibly Tasty

Responsible Retail Brands:

akkarai Responsible Snacking | திண்ணை THINNAI Relax & Recharge Responsibly | ICECREAM VAN Homely IceCream Estd. 2018 (Probably, Only IceCream Free of Chemicals!) | ONDRAHA | CHOCOKICK Cafe Daringly Different like you!

Responsible Snack Brands:

SIDEKICK Always with You | CHOCOKICK DARINGLY DIFFERENT DIFFERENCES make us ONE | TEATIME FRIEND Dip & Enjoy! | RUSKING More Health. More Wealth | OATIES • 35% Oats in Cookies • | ARTY BATTERY BISCUITS | ARTY BATTERY BUNDOOS

RESPONSIBLE FOODS IS THE ONE THING WE CARE

Online: 24/7 Shop at www.akkarai.co.in | www.mdcommunitykitchen.com | www.indianfoods.in | Delivery Across India
Offline: Madurai | Keezhadi | Thattankulam | Chennai
+91 9791900447



‘ராமருக்கு உதவிய அணில் போல’..
ஊர் கூடி தேர் இழுப்பது போல..

# மதுரை ஸ்ரீ மஹாபெரியவர் ஆலயத் திருப்பணியில் பங்கேற்க அரிய வாய்ப்பு...

## ஆலயத் திருப்பணி செய்ய வாருங்கள் பக்தர்களே!

‘இறைவன் குடி கொண்டிருக்கும் ஆலய திருப்பணி செய்வது உன்னதமான பணி!’ என்பதை உணர்த்த, பூசலார் நாயனார் கட்டிய மனக் கோயிலில் எழுந்து அருள் செய்தார் சிவபெருமான்.

‘கருணைக்கடல் ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளால், அந்த பாக்கியம் உங்களைத் தேடி வந்திருக்கிறது. 108 திவ்ய தேசங்களில் ஒன்றான, மதுரை கள்ளழகர் கோயில் மலை அடிவாரத்தில், பொய்கைக்கரைப் பட்டியில், இயற்கை எழில் சூழ காஞ்சி மஹா பெரியவர் திருக்கோயிலைக் கட்டி வருகிறது ‘மதுரை அனுஷத்தின் அனுக்கிரஹம் டிரஸ்ட்

மதுரையில், ‘ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா கிருஹம்’ என்னும் கோயிலை நிர்வகித்து நடத்திவரும் ‘அனுஷத்தின் அனுக்கிரஹம்’ நிறுவனர் நெல்லை பாலு அவர்களின் சீரிய முயற்சியில் அமையவிருக்கிறது இந்தக் கோயில். அரசின் தடையில்லா சான்று உட்பட முறையான அனுமதிகள் அனைத்தும் பெறப்பட்டு போர்வெல், மின் இணைப்புகள் வாங்கி, கோயிலின் அடித்தளப் பணிகள் பூர்த்தி ஆகிவிட்டன. தற்போது நிலத்தின் மேல்தளம் பணிகள் தொடங்கியுள்ளன.

அடுத்த ஆண்டுக்குள் கோயில் கட்டுமானம் பூர்த்தி பெற்று, கும்பாபிஷேகம் செய்யப்பட இருக்கிறது. மஹா பெரியவரின் ஆசி பெற்ற பக்தர்களின் பங்களிப்பு இல்லாமல், சர்வ நிச்சயமாக கோயில் கட்டுவது சாத்தியமில்லை! எனவே, அவரது அருளாசிகளைப் பெற்ற பக்தர்கள், ‘ராமருக்கு உதவிய அணில் போல’, தங்களால் முடிந்த வழிகளில் திருப்பணியில் பங்கு பெறும் அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள அன்போடு அழைக்கிறோம்.!

## எப்படி உதவலாம்?

- திருப்பணிக்கு பணமாக மட்டுமின்றி கட்டிட சாமன்கள், இதர பொருட்களாகவும் வாங்கிக் கொடுக்கலாம்.
- கோயில் அமையவிருக்கிற இடம், கட்டுமானம் சேர்த்து சதுர அடி ஒன்றுக்கு ரூ.3500 ஆகுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. சதுரடி வீதமாக ரூ.3,500 அல்லது 2 சதுர அடி, 5 சதுர அடி, 10 சதுர அடி என விரும்பும் அளவுகளில் அதற்கான தொகையை தரலாம்.
- கோயில் அமைவதற்கான செலவுகள் பல லட்சங்களைத் தொடுவதால், ரூ.1லட்சம் மற்றும் அதற்கு மேல் நன்கொடை தரும் கொடையாளர்களின் பெயர்கள் கல்வெட்டில் பொறிக்கப்பட இருக்கிறது.

**நன்கொடைகளை அனுப்ப**

**94426 30815**

G Pay, PhonePe, Cheque, M.O. மூலமாகவும் பணம் அனுப்பலாம்

மக்கள் பணியில்... Rtn. நெல்லை பாலு, நிறுவனர், அனுஷத்தின் அனுக்கிரஹம், G-102, சாந்தி சதன் குடியிருப்பு,கோச்சடை, மதுரை - 625016.

Account Details:
MADURAIYIN ATCHAYA, PAATHIRAM TRUST
Canara Bank,
Madurai West Avani Moola St.
A/c No.110031396472
IFSC Code: CNRB0001010
MICR Code: 625015006

aanmeegamalar.com